DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.378/13

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name சரஸ்மணி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2020

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் ஊஞ்சாம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என் மாமானார் பீதாம்பரம்சேர்வை. அவருக்கு 5 மனைவிகள். எனக்கு 2 ஏக்கர் 28 செண்ட் நிலம் இருந்தது. என் கணவர் சோலைசேர்வையின் தாயார் பெயர் ராமக்காள். பீதாம்பரம்சேர்வைக்கு ராமக்காள் 3வது மனைவி. எதிரிகளை எனக்கு தெரியும். அசா1ஐ எனக்கு தெரியும். நானும் என் மகள் சந்திரகலா என் மருமகன் ராமசந்திரனும் சேர்ந்து அசா1க்கு 2 ஏக்கர் 28 செண்ட் நிலம் விற்பனை செய்தோம். மேற்படி நிலத்தை பொறுத்து பெரியகுளம் நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமான தீர்ப்பானது. அந்தநிலத்தில் அசா1 வாழை விவசாயம்செய்திருந்தார். அதை 1,2 எதிரிகள் வாழையை வெட்டுவதற்கு வந்தார்கள். அதற்காக அசா1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் தற்போது சொன்ன விபரங்களை மட்டும் தான் போலிச் விசாரணையின் போதும் சொன்னேன்.